இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 15-12-2023

# காஷ்மீரிகளுக்கான நீதி எப்போது?

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு அரசியல் சட்டம் வழங்கிய சிறப்புரிமையை பா.ஜ.க. அரசு நீக்கியது. அந்த முடிவு சரியானதுதான் என்று உச்சநீதிமன்ற அரசியல் சட்ட அமர்வு தீர்ப்பை அளித்திருக்கிறது. இது தொடர்பாக பல்வேறு கருத்துகளை உச்சநீதிமன்றம் சொல்லி இருந்தாலும் சட்டரீதியாகச் சொல்வது ஒன்றே ஒன்றுதான்... “370 ஆவது பிரிவை நீக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு” - என்பது மட்டும்தான்!

காஷ்மீர் மாநிலத்தை காஷ்மீர் - லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களாக பா.ஜ.க. அரசு மாற்றியது. இதையும் உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்கும் அவர்கள் சட்டரீதியாகச் சொல்வது ஒன்றே ஒன்றுதான்... “எந்த மாநிலமாக இருந்தாலும் அதனைப் பிரித்து யூனியன் பிரதேசமாக மாற்றும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு” - என்பது மட்டும்தான்!

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பின் சட்டரீதியான சரக்கு என்பது இவ்வளவுதான்.

காஷ்மீர் மாநிலத்துக்கு 1950 முதல் வழங்கப்பட்டு வந்த சிறப்புரிமையை விலக்கிக் கொள்ளும் முடிவை ஒன்றிய பா.ஜ.க. அரசானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் தேதி நிறைவேற்றிக் காட்டியது.

★ ராமர் கோவில் கட்டுவது

★ 370 ஆவது பிரிவை நீக்குவது

★ குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டு வருவது - இந்த மூன்று மட்டும்தான் பா.ஜ.க.வின் கொள்கை ஆகும். ராமர் கோவிலைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இனிமேல் ‘இலவசமாக’த் தரிசிக்கலாம். குடியுரிமைச் சட்டத்தை நிறைவேற்றும் காலத்துக்காகக் காத்திருக்கிறார்கள். 370 ஆவது பிரிவை நீக்கிவிட்டார்கள்.

370 ஆவது பிரிவை நீக்குவதன் மூலமாக சிறுபான்மை இசுலாமியர்களைப் பழிவாங்குதல் மட்டுமே நோக்கமே தவிர வேறல்ல. அந்த சட்டப்பிரிவு தான் ஏக இந்தியா உருவாக்கத்துக்கு தடை மாதிரியும், இதனால்தான் மைய நீரோட்டத்தில் காஷ்மீரிகள் இணையவில்லை என்பது மாதிரியும் பா.ஜ.க. பீதியைக் கிளப்பிக் கொண்டு இருந்தது. உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றுள்ள பிரதமர் மோடி, காஷ்மீர் என்ற புதிய நாட்டை கைப்பற்றி வென்றதைப் போல கட்டுரை அறிக்கையை வெளியிட்டுள்ளார். ‘நான் சிந்தித்தேன்... நான் யோசித்தேன்’ என்று அதில் தனக்குத் தானே பரிவட்டம் சூட்டிக் கொள்கிறார்.

இதையெல்லாம் ஆர்.எஸ்.எஸ். பிதாமகர்கள் எப்போதோ சொல்லிவிட்டார்கள். ஆர்.எஸ்.எஸின் ராமராஜ்ய பிரஜா பரிஷத் பிரிவானது 370 ஆவது பிரிவை நீக்க வேண்டும் என்ற கிளர்ச்சியை 1952 ஆம் ஆண்டே தொடங்கிவிட்டது. அதைச் செய்து காட்டியது பிரதமர் மோடியின் சாதனையாக இருக்கலாம்.

**370 ஆவது சிறப்புரிமையை விலக்கிக் கொண்டதை ஆதரித்து மட்டுமே உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளதாக பா.ஜ.க. நினைக்கிறது. காஷ்மீர் என்ற மாநிலத்தைச் சிதைத்து காஷ்மீர் - லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசமாக ஜனநாயகப் படுகொலை செய்ததைக் கேள்வி எழுப்புகிறது உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு. காஷ்மீரை மாநிலமாக உயர்த்தியாக வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதை வரவேற்று பிரதமர் மோடி தனது அறிக்கையில் எதையும் குறிப்பிடவில்லை. ‘காஷ்மீரை முழுமையான மாநிலமாக ஆக்கி அம்மக்களது உரிமையைக் காப்பேன்’ என்று பிரதமர் மோடி சொல்லவில்லை.**

காஷ்மீர் மாநிலத்தில் அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குள் தேர்தல் நடத்தியாக வேண்டும் என்று உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது. அதனை வரவேற்று - பிரதமர் மோடியின் அறிக்கையில் எந்த வரிகளும் இல்லை.

ஐந்து நீதிபதிகளில் ஒருவரான நீதியரசர் கௌல், **“1980 ஆம் ஆண்டு முதல் காஷ்மீரத்தில் நடந்து வரும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க பாரபட்சமற்ற உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அமைக்க வேண்டும்”** என்று தீர்ப்பளித்துள்ளார். அப்படி ஒரு ஆணைக் குழு அமைப்போம் என்று பிரதமர் மோடி சொல்லவில்லை. மாறாக, ‘இரண்டு ஊருக்கு நடுவே தடுப்பணை இருந்தது, உடைத்துவிட்டேன்’ என்பதைப் போல 370 ஆவது பிரிவை நீக்கியதை சாதனையாகச் சொல்லி இருக்கிறார்.

**சிறப்புரிமை வழங்கும் சட்டத்தைத்தான் துரோகச் சட்டம் என்கிறார்கள் பா.ஜ.க.வினர். பிரதமர் நேருவின் பிழை என்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. இவர்கள் யாருக்கும் தெரியாது இந்த ‘துரோகச்’ சட்டத்தை உருவாக்கிக் கொடுத்தது அன்றைய நேருவின் அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர் கோபால்சாமி அய்யங்கார்தான் என்று!**

இதுவரை 370 ஆவது பிரிவைக் காரணம் காட்டி காஷ்மீரிகளை பழிவாங்கிக் கொண்டு இருந்தார்கள். இப்போது அதுவும் ரத்தானதால் புதிய காரணத்தைத் தேடுவார்களே தவிர, காஷ்மீரிகளுக்கு நீதி வழங்கப் போவது இல்லை என்பது பிரதமர் மோடி வெளியிட்டிருக்கும் அறிக்கை மூலமாகத் தெரிகிறது.

**“காஷ்மீர் ஓர் விற்பனைப் பண்டமல்ல. அல்லது பண்டமாற்றுப் பொருளுமல்ல. அதற்கு ஓர் தனித்த வாழ்வுண்டு. அதனுடைய தலைவிதியை அதனுடைய மக்களே முடிவு செய்வார்கள். காஷ்மீர் என்பது அந்த மக்களுக்கே சொந்தம். அதற்கென ஓர் ஆன்மா உண்டு. அவர்களுடைய நல்லெண்ணமும் விருப்பமுமின்றி எதுவும் யாரும் செய்ய முடியாது”** என்று சொன்னார் முதல் பிரதமர் நேரு. ஆனால் காஷ்மீரத்தை விற்பனைப் பொருள் போல மாற்றிவிட்டார்கள். தங்களது அரசியல் காய்நகர்த்தலுக்கு பயன்படுத்திவிட்டார்கள்.

**ரோஜா மலரில் இதழ்கள் உதிர்ந்து முள் மட்டுமே இருப்பது போலக் காட்சியளிக்கிறது காஷ்மீர்!**

## சீனாவில் நிலநடுக்கம்!

பெய்ஜிங், டிச.15–

சீனாவின் சின்ஜியாங் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை நிலநடுக்கம் உணரப்பட்டது. சீனாவின் சின்ஜியாங் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5.35 மணியளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. 170 கிமீ ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 4.1 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. நிலநடுக்கத்தால் வீடுகள் லேசாக அதிர்ந்தன.

இதனால் அச்சமடைந்த மக்கள் சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அங்கு சுனாமி எச்சரிக்கை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தற்போது வரை தகவல் வெளியாகவில்லை. இருப்பினும் சில இடங்களில் மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (13.12.2023) முகாம் அலுவலகத்தில், திரைப்பட நடிகர் பிரபு குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

## தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

*சென்னை, டிச. 15-*

*சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-*

*கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, நேற்று(14.12.2023)தமிழகத்தில் ஒருசிலஇடங்களிலும்,புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்தது.*

*இன்று (15.12.2023) தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி மின்னலுடன்கூடியலேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*(16.12.2023 மற்றும் 17.12.2023) தமிழகத்தில் ஒருசிலஇடங்களிலும்,புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும்இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமானமழைபெய்யக்கூடும். கன்னியாகுமரி, நெல்லை, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும்காரைக்கால்பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.*

*(18.12.2023 மற்றும் 19.12.2023) தமிழகம், புதுவை மற்றும்காரைக்கால்பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.*

*சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 டிகிரி செல்சியஸாகவும் இருக்கக்கூடும்.*

*இவ்வாறுகூறப்பட்டுள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2023) முகாம் அலுவலகத்தில், கலைஞர் தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் ப.திருமாவேலன் சந்தித்து, தான் எழுதிய “வைக்கம் வீரரும் ஜெயமோகனின் கயமையும்” என்ற நூலினை வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

## நாகூர் தர்கா சந்தனக் கூடு திருவிழாவிற்கு

# 45 கிலோ சந்தனக்கட்டைகள் கட்டணமின்றி வழங்க உத்தரவு !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச. 15 - நாகூர் தர்கா கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு 45 கிலோ சந்தனக் கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

நாகூர் தர்காவில் ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரி திருவிழாவிற்கு, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் கோரிக்கையினை ஏற்று தமிழ்நாடு அரசு வனத்துறையில் இருப்பில் உள்ள சந்தனக்கட்டைகளை நாகூர் தர்காவிற்கு கட்டணமின்றி வழங்கி வருகின்றது.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.12.2023) தலைமைச் செயலகத்தில், நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடுஅரசு45கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்குவதற்கான அரசாணையினை நாகூர் தர்கா பரம்பரை அறங்காவலர் அல்ஹாஜ் செய்யது காமில்சாஹிப், தலைமை நிருவாக அறங்காவலர் செய்யது முகமது காஜி ஹூசைன் சாஹிப் மற்றும் நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் செய்யது முஹம்மது கலீபா சாஹிப் ஆகியோரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், வனத்துறை அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹூ, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந.கௌதமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில்

# 551 பயனாளிகளுக்கு ரூ.1.05 கோடியில் - அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் வழங்கினர்!

*புதுக்கோட்டை. டிச. 15-*

*புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், குளந்திரான்பட்டு கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 13.12.2023 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.*

*இம்முகாமில் தமிழக அரசு பல்வேறு அரசுத் துறைகளின் வாயிலாக மேற்கொள்ளப்படும் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்தும், அத்திட்டங்கள் மூலம் பயன்பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்களால் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, பொதுசுகாதாரத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண்மைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.*

*குளந்திரான்பட்டு கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், வருவாய்த்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை, ஊரக வளர்ச்சித்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில், 551 பயனாளிகளுக்கு ரூ.1,04,90,699 மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசியதாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் குறைகளை மனுக்களாகப் பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒருகுக்கிராமத்தை தேர்வு செய்து, மக்கள் தொடர்பு முகாம் நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி இன்றையதினம் கறம்பக்குடி வட்டம், குளந்திரான்பட்டு கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில், தமிழக அரசின் சார்பில் பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் அரசின் திட்டங்களை விளக்கும் கண்காட்சி அரங்குகளை பொதுமக்கள் அனைவரும் பார்வையிட்டு, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை அறிந்துகொண்டு பயன்பெற வேண்டும்.*

*மேலும் பொதுமக்கள் அனைவரும் அளிக்கும் மனுக்கள் மீது மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் தீர்வு காணப்படும். அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் பயன் பெறுவதற்கு பொதுமக்கள் அனைவரும் கோரிக்கை மனுக்களை அளித்து பயன் பெறலாம். இம்மனுக்களின் மீது துறை சார்ந்த அலுவலர்களால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுதி செய்யும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தில் கண்காணிப்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*எனவே பொதுமக்கள் அனைவரும் இதுபோன்ற முகாம்கள் மூலமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத் திட்டங்களை அறிந்துகொள்வதுடன், அவற்றின் மூலம் பயன்பெற வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.*

*இந்த மக்கள் தொடர்பு முகாமில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் மாலா ராஜேந்திரதுரை, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, மாவட்ட அறங்காவல்குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், கறம்பக்குடி அட்மா தலைவர் முத்துகிருஷ்ணன், வட்டாட்சியர் நாகநாதன், ஊராட்சிமன்றத் தலைவர் வீரப்பன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.*



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், குளந்திரான்பட்டு கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் நேற்று முன்தினம் (13.12.2023) நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களை வழங்கினார். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. மாலா ராஜேந்திரதுரை, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) மு.செய்யது முகம்மது, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.